

# எத்தியோப்பியாவின் புதுமைகாண் தொழில்நுட்ப அமைச்சகத்துடன் ஆராய்ச்சி கூட்டாண்மைக்கு லயோலா கல்லூரி ஒப்பந்தம்

சென்னை, ஜூலை.21–

சென்னை லயோலா கல்லூரி, கல்வி மற்றும் ஆராய்ச்சி கூட்டாண்மையை மேம்படுத்துவதற்காக எத்தியோப்பியாவின் புதுமைகாண் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

எத்தியோப்பியாவின் புதுமைகாண் மற்றும் தொழில்நுட்பத் துறையின் அமைச்சர் பாயிஸ்லா படாடா படாசா, அருள் ஏ. தாமஸ் சே. ச. ஆகியோர், நாடாளுமன்ற உறுப்பினரும் டாம்பி டோல்லோ பல்கலைக்கழகத்தின் தலைவருமான இலெட்டா டெஸ்ஃபாயே ஜூல் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்த ஒப்பந்தமானது எத்தியோப்பியா பல்கலைக்கழகங்களுக்கும் லயோலா கல்லூரிக்கும் இடையேயான கூட்டுத் தேவை அடிப்படையிலான கல்வி, அறிவியல் மற்றும் ஆராய்ச்சி திட்டங்களைத் தொடங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதில் மாணவர்/பணியாளர் பரிமாற்ற ஆராய்ச்சி, ஒத்துழைப்புகள் மற்றும் வெளியீடுகள் ஆகியவை அடங்கியுள்ளன.